# பேரவை Peravai

தமிழர் பேரவை
[ESTB 1951]

M.I.T.A. (P) NO. 382/10/2000 | தமிழுக்கும் தமிழருக்கும் வளம் சேர்ப்போம். | ஜனவரி 2001


# நினைவில் நிற்கும் இந்திய அதிபரின் இனிய வருகை

இந்தியாவின் குடியரசுத் தலைவர் மேன்மைமிகு கே. ஆர் நாராயணன் அவர்களும், அவர்தம் துணைவியார் உஷா நாராயணன் அவர்களும் நவம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் சிங்கப்பூருக்கு வருகை தந்தார்கள்.

சிங்கப்பூர் வருகை தந்தபோது சிங்கப்பூர் இந்திய அமைப்புகளின் பிரிதிநிதிகளைச் சந்தித்தார். சிங்கப்பூர் இந்தியத் தூதரின் ஏற்பாட்டில் இந்திய அமைப்புகளோடு இணைந்து நவம்பர் 12ஆம்தேதி சங்ரிலா விடுதியில் இந்திய அதிபருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழர் பேரவையின் இணை அமைப்புகள் வரவேற்பிலும், கலந்துரையாடலிலும் கலந்துகொண்டு கருத்துக்களை பரிமாறிக் கொண்டன.



இந்தியாவின் குடியரசுத்தலைவர் கே.ஆர் நாராயணன் தமிழர்பேரவையின் தலைவர் டாக்டர் ஆர் தேவேந்திரன் அவர்களுடன் நெகிழ்ந்து உரையாடும் காட்சி.



தமிழர் சீர்திருத்த இயக்கத்தின் செயலாளர் திரு. அ. வை. கிருஷ்ணசாமி தமிழர் பேரவையின் பெண்கள் பிரிவின் துணைத்தலைவர் திருமதி. இந்திரா கிருஷ்ணன் இந்திய அதிபருடன்.



தோபாயோ நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தவிந்தர் சிங்குடன் தமிழர்பேரவையின் மேலாண்மைக்குழு உறுப்பினர்கள்.

## பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்

குடும்பத்தோடு பொங்கல் விழாக் கொண்டாடி மகிழும் அனைத்து உறுப்பினர்களுக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் எங்கள் இனிய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழோடும், தமிழர் பேரவையோடும் இணைந்து பணியாற்றும் அனைவருக்கும் எல்லா நலமும் வளமும் கூடி வாழ்க்கை ஒளிபெற வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்
தலைவர் மற்றும்
தமிழர் பேரவை மேலாண்மைக்குழுவினர்

## வாழ்த்துகிறோம்

15.10.2000ம் நாள் நடைபெற்ற, தமிழர்பேரவை பன்னோக்குக் கூட்டறவுக் கழகத்தின் பொதுக் கூட்டத்தில், செயல்திறன்மிக்க மேலாண்மைக்குழு, டாக்டர் ஆர். தேவேந்திரன் அவர்கள் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இக்குழு மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளும் வானுயர வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

## வெற்றிக்கு அடிப்படை

பலரின் வெற்றிக்கு அடிப்படை தன்முயற்சிதான். தன்முயற்சி பற்றி தமிழ் இளையர்களிடையே பேச இருக்கிறார், பல அமைப்புகள் உச்சநிலை அடைய காரணமாக இருந்தவரும் தமிழர் பேரவையின் தலைவருமான

டாக்டர். ஆர். தேவேந்திரன், PBM

நாள் : 24.2.2001 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 2 மணி
இடம் : சாங்காட் சமூக நிலைய அரங்கம், 13, தெம்பனிஸ் சாலை 11

100 பேர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர். 16-20 வயதுள்ள தமிழ் இளையர்கள் முன் கூட்டியே பதிந்துகொள்ள வேண்டும். தொலைபேசி 3366316

# புத்தாயிரமாம் ஆண்டில் தமிழ் கற்றலும் கற்பித்தலும்-கருத்தரங்கு

தொழில் நுட்பத்தின் வழி 'தமிழ் கற்றலும்' கற்பித்தலும் என்னும் கருப்பொருள் பற்றிய கருத்தரங்கு புக்கிட் தீமா சாலையில் அமைந்திருக்கும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தேசிய கல்விக்கழகத்தில் நடைபெற்றது.

நவம்பர் மாதம் 4 ஆம் தேதி காலை மணி 7.45க்குத் தொடங்கி மாலை 5.45 வரை ஒரு நாள் கருத்தரங்கமாக நடைபெற்றது.

தேசிய கல்விக்கழகத்தின் ஆசிய-மொழிகள் மற்றும் பண்பாட்டுத்துறையின் தலைவர், இணைப்பேராசிரியர் சான் சியு மிங் அவர்களின் வரவேற்புரையுடன் கருத்தரங்கம் தொடங்கியது.

தொடர்ந்து தேசிய கல்விக்கழகத்தின் முதல்வர் பேராசிரியர் கோ தாய் ஆன் தலைமையுரை ஆற்றினார்.

ஈஸ்ட் கோஸ்ட் குழுத்தொகுதி நாடாளு-மன்ற உறுப்பினரும், பிரதமர் அலுவலகம் மற்றும் சுகாதார அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளருமான திரு. சான் சூ சென் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.



நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சான் சூ சென் அவர்களுடன் தமிழர் பேரவையின் கல்விப் பிரிவு உதவிச்செயலாளர் திரு. சி. ஆ. முத்தையா, தமிழர்பேரவையின் மேலாண்-மைக்குழு உறுப்பினர் திரு. சி. தங்கவேலு கலந்துரையாடும் காட்சி.



தமிழர் சீர்திருத்தச்சங்கத்தின் செயலாளர் திரு. அ. வை. கிருஷ்ணசாமி அவர்களுக்கு சிறப்பு விருந்தினர் திரு. சான் சூ சென் அவர்களால் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கப் படுகிறது.

அவருடைய சிறப்புரையில் உலகத்தில் கல்வியில் சிறந்த நாடுகளுள் சிங்கப்பூரும் ஒன்று என்று புகழாரம் சூட்டினார்.

இந்திய மாணவர்கள் ஆங்கிலத்தில் சிறப்பாகவும், கணிதத்தில் சிறப்புக்-குன்றியும் தேர்ச்சி பெறுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்க மாணவர்களுக்காகவே இதழ்-தொடங்கி அதில் அவர்களைப் பங்கேற்கச் செய்யவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

கல்வியைக் கற்றலிலும், கற்பித்தலிலும் ஈடுபடும் 51 மேல்நிலை கல்விச் சான்றிதழாளர்களின் ஆய்வுமுடிவுகள் நான்கு தமிழ் அமைப்புளின் ஆதரவோடு நான்கு நூல்களாக வெளியிடப்பட்டன.

தமிழர் பேரவையின் இணை அமைப்பான தமிழர் சீர்திருத்தச் சங்கம் ஐயாயிரம் வெள்ளி நன்கொடை வழங்கி ஆதரவு தந்துள்ளது.

# சமூகப்பணியில் சாதனை புரிந்தோர்க்கு விருதுகள்

உலு பாண்டான் இந்திய நற்பணிச் செயற்குழு புத்தாயிரத்தாண்டின் முதல் நிகழ்ச்சியான "தீப ஒளி-2000"த்தைப் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட சமூகநிலையித்தில் முதல் நிகழ்ச்சியாக நடத்தி மகிழ்ந்தது.

சிங்கப்பூரின் தேசிய முன்னாள் காற்பந்தாட்ட வீரர் திரு. வி. சுந்தரமூர்த்திக்கும், தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் ஆர். தேவேந்திரன் அவர்களுக்கும் சாதனையாளர் விருதுகளை இலாகா இல்லா அமைச்சர் திரு. லிம் பூன் ஹெங் வழங்கினார்.

சமூகப்பணி ஆற்றிவரும் நிறுவனமான தமிழ் முரசுக்குரிய விருதை அதன் ஆசிரியர் டாக்டர் சித்ரா ராஜாராம் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருத்தினராக வருகை தந்தவர் புக்கிட் தீமா குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், இலாகா இல்லா அமைச்சருமான திரு லிம் பூன் ஹெங்.



சாதனையாளர்கள் ஒரே மேசையில்.



தமிழ் முரசு சார்பாக ஆசிரியர் டாக்டர் சித்ரா ராஜாராம் அமைச்சரிடமுருந்து விருது பெற்றார்.



இலாகா இல்லா அமைச்சர் திரு. லிம் பூன் ஹெங் தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் ஆர் தேவேந்திரன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி விருது வழங்குகிறார்.

தமிழரிடையே தமிழ்ப்புழக்கத்தைக் கொண்டு வர, தமிழ் ஆர்வத்தை ஊட்ட தமிழ் தொடர்பான கேள்விகள் கேட்கப்பட்டன. ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதிலைச் சொல்வோருக்கு 50 வெள்ளி பரிசுப் பணம் வழங்கப்பட்டது.

பரிசுகளை வழங்கி தமிழ் ஆர்வத்தை ஊட்டி, ஊக்கப் படுத்திய நிறுவனம் ஸ்டாம் போர்ட் அச்சகம் பிரைவேட் லிமிடெட்.



தமிழ்க் கேள்விகளுக்கு பதிலைச்சொல்லி 50 வெள்ளியைத் தட்டிச்சென்றோர்





சிங்கப்பூர் தேசிய கால்பந்து விளையாட்டு வீரர் திரு. வி. சுந்தரமூர்த்தி. அமைச்சர் திரு. லிம்பூன் ஹெங் அவர்களிடமிருந்து விருதை பெறுகிறார்

# தொண்டினைப் போற்றிய தீபாவளி விருந்து



பேராசிரியர் எஸ். ஜெயக்குமார் வாழ்த்துரை வழங்குகிறார்

இந்து ஆலயங்களில் 40 ஆண்டுகளுக்குமேல் தொண்டூழியம் புரிந்தவர்களை மதிக்கின்ற வகையிலும், பாராட்டுகின்ற வகையிலும் இந்து அறக்கட்டளை வாரியமும், இந்து ஆலோசனை மன்றமும் இணைந்து மாபெரும் தீபாவளி விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்து இருந்தது.

தீபாவளி விருந்து தஞ்சோங் ரூ சாலையில் உள்ள சிங்கப்பூர் நீச்சல் குள வளாகத்தில் நவம்பர் மாதம் 4ம் தேதி பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கியது.

நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக வெளியுறவு, சட்ட அமைச்சர் பேராசிரியர் எஸ். ஜயக்குமார் அவர்கள் கலந்து கொண்டு தொண்டூழியர்களையும், தொண்டூழியர்களின் சேவைகளையும் பாராட்டினார். பல ஆண்டுகளாக ஆலயங்களில் தொண்டூழியம் புரிந்த 28 பேருக்கு முதன்முறையாக இவ்வாண்டு விருதுகள் வழங்கப்பட்டன. அவர்களுள் குறிப்பிடத்தக்க மூத்த தொண்டூழியர்கள் திரு. மு. திருநாளன் (77 வயது), திருமதி சரோஜினி மேனன் (67 வயது). இவர்கள் 40 ஆண்டுகளாக இந்து ஆலயங்களில் தொண் டூழியம் செய்பவர்கள்.

தீபாவளி சிறப்பு விருந்தில் சுமார் 350 தொண்டூழியர்கள், இந்திய அமைப்புகளின் தலைவர்கள், சமய நல்லிணக்க உறுப்பினர் கள், ஆசிரியர்கள், ஆலயப் பிரதிநிதிகள் எனப் பலரும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்புச் செய்தனர்.



நீண்ட நாள் - சேவை விருது பெற்ற தொண்டூழியர்களுடன் பேராசிரியர் எஸ். ஜயக்குமார்



தொண்டூழியருக்கு அமைச்சரின் பாராட்டு

# கனவுகள் வேண்டும் கவிதை நூல் வெளியீட்டு விழா

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழக ஏற்பாட்டில் மூத்தக்கவிஞர் க. து. மு. இக்பால் அவர்களின் "கனவுகள் வேண்டும்" கவிதை நூல் வெளியீட்டு விழா (அக்டோபர் மாதம் 29ம் தேதி ஞாயிற்றுக்கிழமை (திருவள்ளுவராண்டு 2031 ஐப்பசித்திங்கள் 13ம் நாள்) பி. கோவிந்தசாமி பிள்ளை திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழா சரியாக மாலை 6.30க்குத் தொடங்கியது. விழாவிற்கு வந்தோரை எழுத்தாளர்கழகத்தின் செயலாளர் திரு. நா. ஆண்டியப்பன் வரவேற்றார். தமது வரவேற்புரையில் தமிழகத்தில் அண்மையில் நடைபெற்ற 'தமிழ் இனி 2000' மாநாட்டிற்குச் சென்று உண்மைக்குப்புறம்பான கருத்துக்களைச் கூறியதற்கு மறுப்பும், கண்டனமும் தெரிவித்து, அந்த நபரை நேரில் சந்திக்க தமிழ் எழுத்தாளர் கழகம் தயாராக இருக்கிறது என்ற சவாலையும் விடுத்தார். நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய எழுத்தாளர் கழகத்தின் தலைவர் கவிஞரேறு அமலதாசன் ஜெர்மன் நாட்டில் ஹனோவர் நகரில் நடைபெற்ற உலகக்கண்காட்சிக்கு சிங்கப்பூர் கவிதையாக கவிஞர் இக்பால் அவர்களுடைய 'தண்ணீர்' கவிதை தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியை இதுநாள்வரை எந்தத் தகவல் சாதனங்களும் செய்தியாகத் தெரிவிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். தொடர்ந்து நன்யாங் தொடக்கக்கல்லூரி ஆசிரியர், கவிஞர் ப. திருநாவுக்கரசு அவர்கள் கவிஞர் இக்பாலை வாழ்த்தி கவிதை பாடினார். அடுத்து நூலாசிரியருக்கு எழுத்தாளர்கழகத்தின் சார்பில் துணைத்தலைவர் துரைமாணிக்கம் அவர்கள் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தார். ஜி.எம்.டி. நகை மாளிகையின் இயக்குனர் திரு முஹம்மது முஸ்தபா அவர்கள் நூலை வெளியிட்டார். தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் தேவேந்திரன் அவர்களின் சார்பாக உதவித் தலைவர் அமலதாசன் அவர்கள் நூலைப்பெற்றுக் கொண்டார். தொடர்ந்து வெளியீட்டுவிழாவிற்குச் சிறப்பு விருந்தினராகவும், சிறப்புரையாற்றவும் வருகை தந்த தமிழகத்தின் கவிஞர் கவிக்கோ அப்துல்ரகுமான் அவர்கள் சாகித்ய அகாடமி விருது பெற்றதற்காக அவரை வாழ்த்தி பிச்சினிக்காடு இளங்கோ கவிதை வாசித்தார். அடுத்து கவிக் கோவுக்கு தலைவர் அமலதாசன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து சிறப்புச் செய்தார். தொடர்ந்து கவிக்கோ என்று அனைவராலும் அழைக்கப்படும் 'கவிக்கோ' கவிதை இதழின் ஆசிரியர் கவிக்கோ அப்துல் ரகுமான் சிறப்புரை ஆற்றினார். "கவிஞர் இக்பால் அவர்களுடைய கவிதைநூலில் இடம்பெற்றிருக்கும் சிறந்த கவிதை களை எடுத்துக்காட்டி, கவிதை எப்படி எழுத வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி பாராட்டினார். அழகுணர்ச்சியும், தத்துவதரிசனமும், ஆழ்ந்த சிந்தனையும் நிரம்பிய நூலாக கனவுகள்வேண்டும்" கவிதைநூல் வெளிவந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்

கவிக்கோ இதழில் இதுபற்றிய செய்திகளை வெளியிட இருப்பதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து விழாவிற்குத் தாமதமாக வருகை தந்த மலேசிய எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும், மலேசிய நண்பனின் ஆசிரியருமான திரு. ஆதி. குமணன் வாழ்த்துரை வழங்கினார். அவர்தம் உரையில் "கவிதை நூலை புரட்டுவதற்கு முன்பு என்னுடைய எண்ணம் வேறாக இருந்தது. நூலைப்புரட்டி படிக்கத்தொடங்கியதும் ஒவ்வொரு கவிதையும் என்னை ஈர்த்தது" இக்கவிதைகளையும், ஜெர்மன் கண்காட்சியில் இடம்பெற்ற செய்தியையும் பத்திரிகையில் வெளியிட்டுச் சிறப்புச் செய்வதாக அறிவித்தார். அடுத்து, கவிதை நூலின் ஆசிரியர் கவிஞர் க. து. மு. இக்பால் அவர்கள் வழங்கிய ஏற்புரையில் அனைவருக்கும் நன்றி கூறினார்.

எழுத்தாளர்கழகத்தின் துணைச்செயலாளர் திரு. ராமராஜா நன்றிகூற விழா இனிதே நிறைவேறியது. நிகழ்ச்சி நெறியாளர்களாக பிச்சினிக்காடு இளங்கோ, சுப. அருணாசலம் பணியாற்றினார்கள்.



*சிறப்பு விருந்தினர் கவிஞர் கவிக்கோ டாக்டர் அப்துல்ரகுமான் சிறப்புரையாற்றுகிறார்.*




*கவிஞர் க.து.மு இக்பால் அவர்களுக்கு சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் துணைத் தலைவர் துரைமாணிக்கம் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து சிறப்பு செய்கிறார்.*



*ஜி.எம்.டி. நகை மாளிகையின் இயக்குனர் திரு முஹம்மது முஸ்தபா அவர்களிடமிருந்து நூலை பெறுகிறார் தமிழர் பேரவையின் உதவித் தலைவர் திரு மு. அ. மசூது.*

## மேலும் ஆறு அமைப்புகள்

### தமிழர் பேரவைக்கு வலுவூட்டத் தமிழ் அமைப்புகளிடையே ஆர்வம்!

ஆம்! கடந்த ஜூலை மாதம் 23ம் தேதி நடைபெற்ற தமிழர் பேரவையின் ஆண்டுக் கூட்டத்திற்குப்பின் ஆறு அமைப்புகள் ஆர்வமாய் இணைந்திருக்கின்றன. தமிழுக்கும் தமிழருக்கும் தொண்டு செய்ய தமிழ் அமைப்புகள் இணைவது மகிழ்ச்சியாய் இருக்கிறது. இணைந்து பணியாற்ற அமைப்புகள் இணைவது ஒற்றுமைக்கு ஓர் நல்ல அடையாளம்.

இணைந்த அமைப்புகள்:

1. ஸ்ரீ முனீஸ்வரன் ஆலயம்
2. ஸ்ரீ ருத்ர காளியம்மன் ஆலயம்
3. அருள்மிகு முருகன் ஆலயம்
4. முருகன் குன்றம் ஆலயம்
5. எளிமையாக்கப்பட்ட குண்டலினி யோகா சங்கம்
6. கண்ணன் நம் வழிகாட்டி

இன்னும் நான்கு அமைப்புகள் இணைவதற்கு ஆர்வமாய் இருக்கின்றன. இந்தப் போக்கு தமிழர் பேரவையை வலுவான அமைப்பாக்கவும், ஆக்கப்பணிகள் செய்வதற்கும் தூண்டுகோலாக அமைகிறது.

'தங்கம் செய்யாததைச் சங்கம்' செய்யும் என்பதை நாம் நல்லபணிகளைச் செய்வதின் வழி நிலை நிறுத்துவோம். அதற்காக - இன்றே இப்பொழுதே நம் பங்கை ஆற்றுவோம்.

**உனக்கு முன்னே இருப்பவையும் உனக்கு பின்னே இருப்பவையும் உனக்குள் உள்ளதை ஒப்பிடுகையில் அவை ஒரு பொருட்டல்ல**



மகாத்மா காந்தி
இந்தியாவின் விடுதலை இயக்கத்தலைவர்

*'நட்பின் வீற்றிருக்கை யாது?' எனின், கொட்பு இன்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை*

*- திருக்குறள்*

## கோ. கந்தசாமி அறநிதிக்குழுவின் தலைவர் திரு. அ. வை. கிருஷ்ணசாமி

*மறைந்த கோ. கந்தசாமி அறநிதியின் துணைக்குழுத் தலைவராக தமிழர் சீர்திருத்த இயக்கத்தின் செயலாளர் திரு. அ. வை. கிருஷ்ணசாமி தமிழர் பேரவை மேலாண்மைக் குழுவால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.*

*அவருடைய ஆர்வமும் முயற்சியும் இந்த நல்ல பணிக்குப் பெரிதும் உதவும் என்று எதிர்பார்க்கிறோம்.*

*அவர் தன்னுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்ய ஒத்த கருத்துடையவர்களை உறுப்பினராக்கிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

எடுத்த பணியைச் சிறப்பாய்ச்செய்ய தமிழர் பேரவையின் இனிய வாழ்த்துக்கள்

---

## இந்திய அமைச்சருக்கு உற்சாக வரவேற்பு



சிங்கப்பூருக்கு வருகைதந்த இந்திய துணை அமைச்சர் திரு. U. V. கிருஷ்ணம் ராஜூ அவர்களுக்கு சிங்கப்பூர் இந்தியத் தூதரகம், இந்திய அமைப்புகளோடு இணைந்து சிங்கப்பூர் இந்தியர் சங்க வளாகத்தில் சென்ற நவம்பர் மாதம் மூன்றாம் தேதி ஓர் அறிமுக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

சிங்கப்பூர்த் தமிழ் அமைப்புகளின் பிரிதிநிதிகள் கலந்துகொண்டு அமைச்சருடனும் இந்தியத் தூதர் திரு. பி. பி. சுக்லா அவர்களுடனும் உரையாடலில் ஈடுபட்டனர்.

இருபத்தொரு அமைப்புகளை உறுப்பின ராகக் கொண்ட தமிழர் பேரவையின் மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு இந்திய அரசின் நட்பு நடவடிக்கைகளைத் தெரிந்து கொண்டனர்.



தமிழர் பேரவையின் மேலாண்மைக் குழுவுடன் அமைச்சர் மனம்திறந்து உரையாடுகிறார்.




இந்திய அமைச்சர், சிங்கப்பூர் இந்தியத்தூதர் ஆகியோருடன் தமிழர் பேரவையின் மேலாண்மைக்குழு உறுப்பினர்கள்

## கருத்தறியும் பிரிவின் கலந்துரையாடல்

சமூக வளர்ச்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கருத்தறியும் பிரிவு ஏற்பாடு செய்திருந்த "கூட்டுத் தலைமைத்துவம்" பற்றிய கருத்தறியும் கலந்துரையாடல் கூட்டம் நவம்பர் மாதம் 21-ஆம் தேதி நடைபெற்றது. அக்கூட்டத்தில் தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் R. தேவேந்திரன், PBM அவர்களும், தமிழர் பேரவையின் நிர்வாகச் செயலாளர் திரு. T. ஜோதிநாதனும் கலந்து கொண்டனர். ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. நம் நாட்டை வளர்ந்த நாடாக உருவாக்கும் முயற்சிகளுக்கு இதுபோன்ற நிகழ்ச்சி உறுதுணையாய் அமையும்.

## பேரவையின் மகளிர் பிரிவில் ஆர்வமுள்ள புதுமுகங்கள்



தமிழர் பேரவையின் மகளிர் பிரிவுக்குப் புதிய தலைமை. நவம்பர் மாதம் 7ம் தேதி இரவு 7.30 மணிக்கு இலங்கை விளையாட்டு மன்றத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

| | |
|---|---|
| திருமதி இந்திரா R. L. ஈஸ்வரன் தலைவி | |
| திருமதி இந்திரா கிருஷ்ணன் | துணைத்தலைவி |
| செல்வி சோபா குணசேகரன் | செயலாளர் |
| திருமதி சிவா | பொருளாளர் |
| திருமதி L. T. இராமநாதன் | செயற்குழு உறுப்பினர் |
| திருமதி S. அற்புதநாதன் | செயற்குழு உறுப்பினர் |
| திருமதி பாண்டியன் | செயற்குழு உறுப்பினர் |
| செல்வி R. தமயந்தி | செயற்குழு உறுப்பினர் |
| திருமதி விக்டர் மேரி பிலோமினா ஆலோசகர் | |

*மகளிர் பிரிவில் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் இயக்கத்தைத் தொடங்கி இருக்கிறார்கள்.*

இரண்டாயிரத்து ஒன்றாம் ஆண்டில் அவர்கள் நடத்த இருக்கும் நடவடிக்கைகளில் சில:

- அலங்கார காட்சியும் தேநீர் விருந்தும்
- சமையல் விளக்கக் காட்சிகள்
- சமையல் செய்வது எப்படி? வகுப்புகள்
- உடல் நலம் - உரை நிகழ்ச்சிகள்
- யோகா மற்றும் ஏரோபிக் பயிற்சி வகுப்புகள்
- குடும்பநல நடவடிக்கைகள்

*மகளிர் பிரிவில் சேர்ந்து தமிழ்ச் சமுதாயத்திற்குப் பணியாற்ற விரும்பும் மகளிர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 3366316*

## ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திய விமான விபத்து SQ006

அக்டோபர் மாதம் 31ம் தேதி நடை பெற்ற இந்தக்கோர விபத்து நம் நெஞ்சங்களை நொறுக்கி மீளாத் துயரில் ஆழ்த்தியது.



விபத்தில் சிக்கி உயிரிழந்தோரின் ஆத்மா அமைதியடையவும், படுகாயமுற்றோர் விரைவில் குணமடையவும், சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கத்தின் சார்பாக ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயத்தில் நவம்பர் மாதம் 5ம் தேதி சிறப்பு வழிபாடு நடைபெற்றது. சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்க உறுப்பினர்களும், மற்றவர்களும், துயரச்செய்திகேட்டு துன்புற்றோர் அனைவரும் வழிபாட்டில் கலந்துகொண்டனர்.



காலை 7 மணிக்குத் தொடங்கிய பிரார்த்தனையும் வழிபாடும் நண்பகல் 12 மணிவரை நடைபெற்றது. பிரதமர் அலுவலக நாடாளுமன்றச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான *திரு. சான் சூ சென்* சிறப்பு வழி பாட்டிலும் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டார். பக்தர்களுடன் துன்பத்தையும், வேதனையையும் பகிர்ந்துகொண்டார்.

"விபத்தில் சிக்கி மறைந்தோர்க்கு ஆத்ம அமைதியையும் விபத்தில் சிக்கி படுகாயமுற்றோர்க்கு விரைவான நிவாரணமும் வழங்கி எங்களுக்கு அமைதியைத்தா இறைவா" என்பதே அந்தச்சோகம் சூழ்ந்த வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் பங்குகொண்ட ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒலித்த ஒலிகளாம்.

**SQ006 விமான விபத்தில் உயிரிழந்தோர்க்கும், படுகாயமுற்றோர்க்கும், இவர்களின் இழப்பால் துன்பத்தில் மூழ்கி வேதனையுறும் உறவினர்களுக்கும் தமிழர் பேரவை மேலாண்மைக்குழு தனது ஆழ்ந்த இரங்கலையும், வேதனையையும் தெரிவித்துக் கொள்கிறது.**

## கவிஞர் ந. பழநிவேல் என்னும் கவிதை அருவிக்கு அஞ்சலி



1908-ம் ஆண்டு தஞ்சை மாவட்டம் சிக்கலில் பிறந்த இவர். 1930-ம் ஆண்டிலிருந்து சிங்கப்பூரில் வாழ்ந்து வந்தார்.

கவிதை, சிறுகதை, கட்டுரைகள், மேடை நாடகங்கள், இசைப்பாடல்கள், ஒலிபரப்புத்துறை என்று பலதுறைகளிலும் முத்திரை பதித்த மூத்தக் கவிஞர்.

சிங்கப்பூர்த் தமிழ்ப்படைப்புலகுக்குப் பெரும் பங்களிப்பைச் செய்தவர். சிங்கப்பூர் கலை இலக்கிய உலகின் முன்னோடி. இவருடைய 'வலிமை' என்னும் முதல் கவிதை 1931-ம் ஆண்டு "நவநீதம்" இதழில் வெளிவந்தது.

தமிழ்ப்பணி மட்டுமன்றி தமிழருக்குச் சமூகப் பணியும் ஆற்றியவர். சிங்கப்பூர்த் தமிழர் சீர்திருத்தச் சங்கத்தில் தமிழவேள். கோ. சாரங்கபாணி அவர்களுடன் தோளோடு தோள் கொடுத்து உழைத்தவர்.

சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்புவதில் முனைப்புக் காட்டியவர். பல சீர்திருத்த நாடகங்களை எழுதி, மேடை ஏற்றி, நடித்து, இயக்கியும் இருக்கிறார். தமிழவேள் அவர்களை நடிக்கவும் வைத்திருக்கிறார். குரல் வளமும், இசைப்புலமையும் மிக்க இவர், பாடல்கள் எழுதி மெட்டமைத்துப் பாடியுமிருக்கிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் அணிந்துரையுடன் தமிழ் முரசு வெளியீடாக 1947ஆம் ஆண்டு "கவிதை மலர்கள்" என்னும் கவிதை நூல் வெளிவந்தது. போன்றவை இவரின் நாடகங்கள், சிறுகதைகள், கவிதைகள் கட்டுரைகள், உரையாடல் இவருடைய மகன் ப. பாலகிருஷ்ணன் அவர்களால் தொகுக்கப்பட்டு "கவிஞர் ந. பழநிவேலு படைப்புக் களஞ்சியம்" என்னும் பெயரில் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

சிங்கப்பூர் அரசின் உயரிய கலை இலக்கிய விருதான 'கலாசாரப் பதக்கம்' இவருக்கு 1987-ல் வழங்கப்பட்டது. அதே ஆண்டில் இந்திய நுண்கலைக் கழகத்தின் "கலாரத்னா" விருதும் அளிக்கப்பட்டது. சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் 1997 ஆம் ஆண்டு தமிழவேள் விருது வழங்கி சிறப்பித்தது.

தமிழுக்காகவும் தமிழருக்காகவும் எழுதி வாழ்ந்த தமிழருவி திரு. ந. பழநிவேலு அவர்கள் நவம்பர் 11-ம் தேதி இயற்கை எய்தினார்.

அன்னாரை இழந்து துயருறும் அவர்தம் குடும்பத்திற்கு தமிழர் பேரவையின் அனுதாபங்கள்.

*தஞ்சைதந்த*
*நன்செய்*

*தமிழின் எல்லா வடிவத்தையும்*
*கலைவடிவமாக்கிய ஏகலைவன்*

*சிக்கலில்லாச்*
*சிந்தனைத்தென்றல்*

*தமிழை*
*ஈரமாய் வாழவைத்த*
*அருவி*

*வாழ்க்கையின் இலக்கணம்*
*இலக்கணமாய்*
*வாழ்ந்த இலக்கியம்*

*அவர் போட்ட*
*இலக்கிய நெடுஞ்சாலையில்*
*எங்கள் பயணம்...*

- பிச்சினிக்காடு இளங்கோ

## $150 - $250 நிதி உதவி

தொடக்க நிலை அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் இந்திய மாணவர்களுக்கு $150-$250 வரை நிதியுதவி வழங்குகிறது, பேரவை. 30 நிதி உதவிகள் விரைவில் வழங்கப்படும். குறைந்த வருவாய் அல்லது நிதி நெருக்கடியிலுள்ள குடும்பத்திலிருந்து வரும் குழந்தைகளின் கல்விச் செலவினை ஈடுகட்ட இவ்வுதவித்தொகை வழங்கப்படுகிறது. விண்ணப்பம் செய்வோர் கீழ்க்கண்ட விதிகளுக்குட்பட்டிருக்க வேண்டும்.

அ. பெற்றோரில் ஒருவர் இந்திய வம்சாவளி அல்லது இலங்கைத் தமிழராக இருக்கவேண்டும்.

ஆ. மொத்த குடும்ப வருமானம் $2000க்குள் இருக்க வேண்டும் அல்லது குடும்பத்திலுள்ளவர்களின் சராசரி வருமானம் $600க்கும் குறைவாக இருக்க வேண்டும்.

இ. பள்ளியில் தமிழ் கற்கவேண்டும். விண்ணப்பத் தாட்கள் பேரவை அலுவலகத்தில் கிடைக்கும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தாட்களை 26. 1. 2001 நாள் மாலை 6 மணிக்குள் அனுப்பி வைக்கவேண்டும்.

### தமிழர் பேரவை

1 சோபியா சாலை #03-39 பீஸ் சென்டர்
சிங்கப்பூர் 228149.
தொலைப்பேசி 3366316 / 3334656
தொலைப்பிரதி 3335616

## சிங்கைச் சுடர்

ஒரு திங்களிதழ்
தமிழர் பேரவையின் வெளியீடு



இந்திய சமூகங்களின் நலன்கருதி தமிழர் பேரவை பெருமையுடன் வெளியிடும் தரமான இதழ். நல்ல செய்தி களை எளிய தமிழில் வழங்கும் புத்தம் புதிய இதழ்

குடும்பநலம், உடல் நலம், நாட்டுநலம், கவிதைகள், கதைகள், நகைச்சுவை, செய்தித் துணுக்குகள், பொன் மொழிகள் எல்லாம் நிறைந்த இதழ்.

வாசிக்கும் பழக்கத்தைத் தூண்ட; சிந்தனைத்திறனை வளர்க்க; எழுத்தாற்றலை மேம்படுத்த நிறைய போட்டிகளை நடத்தும் இதழ்... சிங்கைச்சுடர்

*மேல் விபரங்களை விரைவில் எதிர்பாருங்கள்*

*உன் வெற்றிக்கு நீயே மிகப்பெரிய தடை*
- பிரேங்க் டைகெர்

## 2001-ஆம் ஆண்டிற்குரிய சிங்கப்பூர் நிர்வாக மேம்பாட்டு நிறுவனத்தின் கல்வி நிதியுதவி

*தமிழர் பேரவையின் உறுப்பினர்களில் இருவருக்கு 2001-ம் ஆண்டில் டிப்ளோமா படிக்க சிங்கப்பூர் நிர்வாக மேம்பாட்டு நிறுவனம் உதவிநிதி வழங்க முன் வந்திருக்கிறது.*

*டிப்ளோமா பாடங்கள்*

- ☐ *டிப்ளோமா விற்பனை மேலாண்மை*
- ☐ *டிப்ளோமா / மேல் நிலை டிப்ளோமா வியாபார மேலாண்மை*
- ☐ *டிப்ளோமா / மேல் நிலை தகவல் சாதனம்*
- ☐ *டிப்ளோமா / மேல் நிலை டிப்ளோமா நிர்வகித்தலும் மேலாண்மையும்*

*தமிழர்பேரவையின் உறுப்பினர்களும், தமிழர் பேரவை யில் இணைந்த அமைப்புகளின் உறுப்பினர்களும் இந்த உதவி நிதிக்கு விண்ணப்பிக்கலாம்.*

*விண்ணப்பப்படிவத்திற்கும், விவரங்களுக்கும் 3366316 என்ற எண்ணில் தமிழர் பேரவையின் நிர்வாகச் செயலாளர் திரு. தி. ஜோதிநாதனுடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

*பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தபால் வழியோ, கைப்படவோ தமிழர் பேரவையிடம் ஒப்படைக்கவேண்டும். தமிழர் பேரவை பின்பு சிங்கப்பூர் நிர்வாக மேம்பாட்டு நிறுவனத்திற்குத் தனது பரிந்துரையுடன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்.*

*2001 பிப்ரவரி 28 வரை விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.*

## தமிழர் பேரவையின் இணையத் தளம் தொடக்கம்

தமிழர்பேரவை புத்தாண்டில் புதிய இணையத்தளத்தைத் தொடங்கு கிறது. இதன்வழி தமிழர் பேரவை யின் உறுப்பினர்களும் அமைப்பு களும் தமிழர் பேரவையின் சீரிய பணிகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும்.

சிங்கப்பூர் இந்தியர் மேம் பாட்டுச் சங்கம், வளர்தமிழ் இயக் கம், மற்றும் இணை அமைப்பு களின் செய்திகளையும் இணை யத்தளத்தில் காணலாம்.

இணையத்தளத்தின் மேம் பாட்டிற்கு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை நிர்வாகச் செயலா ளரிடம் தெரிவிக்கலாம்.

இணையத்தளத்தின் இனிய தொடக்கத்தை விரைவில் எதிர் பாருங்கள்.

# கல்வி உதவித்திட்டம் - 2001

தமிழர்பேரவை 1982-ம் ஆண்டிலிருந்து தேசிய முயற்சியாக கல்வி உதவித்திட்டத்தின் வழி இந்தியக் குழந்தைகளின் கல்வி மேம் பாட்டில் ஈடுபட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் வழி இதுநாள்வரை 30,000 மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

2001-ஆம் ஆண்டின் கல்வித் துணைப்பாட வகுப்புகள் வரும் பிப்ரவரி மாதம் 4ஆம் தேதி தொடங்குகிறது. நம் சமூகத்தை, வெற்றியை நோக்கி அழைத்துச்செல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், பட்டதாரிகளும், முதுநிலை மாணவர்களும், தேர்ச்சி பெற்ற கல்வித் தொண்டூழியர்களும் துணைப்பாட வகுப்புகளை நடத்த இருக்கிறார்கள்.

தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் தயாரிக்கப்படும் பாடக் குறிப்புகள் தொண்டூழியர்களுக்கு வழங்கப் படும்.

உங்கள் குழந்தைகள் பள்ளிப் பாடத்தில் சிறப்பாகத் தேர்ச்சி பெற துணைப்பாட வகுப்புகளில் கிடைக்கும் பாடப்பயிற்சிகள் உதவி செய்யும்.

## துணைப்பாட வகுப்புத்திட்டம் 2001

| | | |
|---|---|---|
| நாள் | முதல் தவணை | 2001 பிப்ரவரி 4 முதல் 2001 மே 13 வரை (15 ஞாயிறுகள்) |
| | இரண்டாம் தவணை | 2001 ஜூலை 1 முதல் 2001 அக்டோபர் 7 வரை (15 ஞாயிறுகள்). |
| பாடங்கள் | பாலர் வகுப்பு 1 முதல் 2 வரை | ஆங்கிலம்/கணக்கு/தமிழ் |
| | தொடக்கநிலை 1 முதல் 6 வரை | ஆங்கிலம்/கணிதம்/அறிவியல்/தமிழ் |
| | உயர்நிலை 1 முதல் 4 வரை | ஆங்கிலம்/கணிதம்/அறிவியல்/தமிழ் |

வகுப்புகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை பல்வேறு மையங்களில் நடைபெறும்.

## கல்விக்கட்டணம்

அதிகமான மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்பதற் காகக் குறைந்த கட்டணமே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வகுப்புகளுக்கான ஒரு தவணைக்குரிய கட்டண விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

குறைந்த வருவாய்பெறும் குடும்பத்தின் குழந்தைகளுக்கு கல்விக் கட்டணத்திலிருந்து ஒரு பாதியாகவோ அல்லது முழுமையாகவோ கழிவு தரப்படும்.

| | |
|---|---|
| பாலர் வகுப்பு 1 / பாலர் வகுப்பு 2 | $60 |
| தொடக்கநிலை 1 முதல் 6 வரை | $80 |
| உயர்நிலை 1 முதல் 4 வரை | $100 |
| பதிவுக்கட்டணம் (ஒருவருக்கு) | $5 |

ஒரு சமூகத்தின் எதிர்காலத்தைக் கல்வி முடிவு செய்கிறது. இந்தத் திட்டத்தின் வழி பயனடைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வழிகாட்ட வேண்டும்.

'பேரவை' செய்திக் கடிதத்துடன் விண்ணப்பப்படிவம் இணைக்கப்பட்டிருக்கிறது. விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி செய்து தபால்வழி அனுப்புங்கள் அல்லது 3335616 என்ற தொலைப்பிரதிவழி விரைவில் அனுப்பிவைக்கவும் நீங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள மையங்களில் உங்கள் குழந்தைகள் சேர்க்கப்படுவார்கள்.

**மேல் விபரங்களுக்கு ☎ 3366316**

**நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக இப்பொழுதே செயல்படுங்கள்.**

# சென்னை சென்றுவர விமான டிக்கெட்

ஆம். பேரவையில் உறுப்பினர் சேர்க்கும் இயக்கத்தை முன்னிட்டு நடத்தப்படும் அதிஷ்டக் குலுக்கு மூலம் நீங்கள் சென்னை சென்றுவர விமான டிக்கெட் பெறும் வாய்ப்பு! நீங்கள் முன்மொழிந்து ஏற்றுக் கொள்ளப்படும் ஒவ்வொரு ஆயுள் உறுப்பினருக்காகவும், அல்லது $10 மாதாந்திர நன்கொடை செலுத்தும் ஜைரோ உறுப்பினருக்காகவும் ஒரு அதிஷ்டக் குலுக்குச் சீட்டு தரப்படும் நீங்கள் வெற்றி பெறும் வாய்ப்பை பன்மடங்காக்கிக் கொள்ள, உங்கள் குடும்பத்தினரையும் உறவினர்களையும் நண்பர்களையும் பேரவையில் இன்றே உறுப்பினராக்குங்கள். சென்னை சென்று வாருங்கள்! உறுப்பினர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கக் கடைசி நாள் 8.8.2001. உறுப்பினர் சேர்க்கைக் குறித்த விபரங்களுக்கும் அதிஷ்டக்குலுக்கு பற்றிய விபரங்களுக்கும் நிர்வாகச் செயலாளர் திரு. T. ஜோதிநாதனுடன் தொடர்பு கொள்ளவும். புதிய உறுப்பினர்களுக்கும் சிறந்த அன்பளிப்புகள் காத்திருக்கின்றன.

**☎ 3366316**

**தமிழரின் குரலாம், தமிழர் பேரவையின் ஓர் அங்கமாகத் திகழுவதில் பெருமை கொள்வோம்.**

## புதிய உறுப்பினர்களை அன்போடு வரவேற்கிறோம்

### ஆயுள் உறுப்பினர்கள்

திரு கே ராமனுஜம்
திரு. மாசிலாமணி அன்பழகன்
திரு. ஆர் தங்கராசு
திரு. விஜயகமலன்
திருமதி. சந்திரமாலா
திரு பாலு விஸ்வநாதன்
திருமதி இந்திராணி
குமாரி லாவன்யா ராணி
திருமதி லட்சுமி தேவி
திரு வி. சி. அற்புதநாதன்
திருமதி சரஸ்வதி அற்புதநாதன்
திரு. சிவநேசன்
திரு. ஜான் சின்னையா
குமாரி ஷோபா குணசேகரன்

### ஜைரோ உறுப்பினர்கள்

திரு. எஸ். மோகனரூபன், PBM
திரு. ஆர். ஆறுமுகநாதன்
டாக்டர் ஆர். தேவேந்திரன், PBM
திருமதி மதனமாலா
திரு. அப்துல் ரசீது
குமாரி ஆர் தமயந்தி
திரு. பிச்சினிக்காடு இளங்கோ
குமாரி ஷோபா குணசேகரன்

## Heartiest Welcome to our New Members

### LIFE MEMBERS

Mr K Ramanujaam
Mr Masilamani Anbalagan
Mr R Thangarasu
Mr Vijayakamalan
Mrs Chandramala
Mr Balu Viswanathan
Ms Indrani d/o Es Muthu
Miss Lavanya Rani d/o Lavan Iswaran
Mrs Lakshymy Thevy Subramaniam
Mr V. S. Artputhanathan
Mrs Sarasvathy Artputhanathan
Mr Sivanesan
Mr John Chinnaiah
Miss Shoba Gunasegaran

### GIRO CONTRIBUTORS

Mr S Moganaruban, PBM
Mr R Arumuganathan
Dr R Theyvendran, PBM
Mdm K Mathanamala
Mr Abdul Rasheed
Miss R Thamayanthi
Mr Pichinikadu Elango
Miss Shoba Gunasekaran



## மீண்டும் ஒரு பெருமை

தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் ஆர். தேவேந்திரன் அவர்களின் நிறுவனமான ஸ்டாம்போர்டு அச்சகம் பிரைவேட் லிமிடெட் இவ்வாண்டின் "சிங்கப்பூர்ச் சிறந்த ஐம்பது நிறுவனங்களுக்கான விருதை" பெற்றிருக்கிறது. இது தமிழர்க்குப் பெருமை.

"தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்ற பாட்டுவரிகளுக்குக் கிடைத்த பெருமை.

சிறந்த திட்டங்கள், தொலைநோக்கு, ஆண்டு வருவாய், சொத்து விபரம், வெளிநாட்டு வர்த்தகத்தில் கிடைக்கும் லாபம் ஆகியவற்றைக் கணக்கிட்டே இந்த விருது வழங்கப்படுகிறது.

இன்றைய அறிவுசார்ந்த பொருளியலில் ஊழியர்களின் பயிற்சிக்கும் மேன்மைக்கும், புதிய கண்டுபிடிப்பு, புத்தாக்கம், ஆய்வு மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

## Attributes for SUCCESS!

A motivational talk cum workshop conducted by **Dr R Theyvendran, PBM**

Date : Saturday 24 Feb 2001
Time : 2 - 5 pm
Venue : Changkat C C Auditorium
Tampines St 11

Specially designed for young people between the ages of 16 and 20 For more details and registration, Call 3366316.

## தமிழர் பேரவையின் அலுவலகம் இடமாற்றம்

செலவைக் குறைக்கும் சிக்கன நடவடிக்கையாக டிசம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து தமிழர் பேரவையும், தமிழர் பேரவை பன்னோக்குக் கூட்டுறவுக்கழகமும் இணைந்து ஒரே பணிமனையில் செயல்படுகிறது. தொலைப்பேசி எண்ணில் மாற்றமில்லை.

*புதிய முகவரி*
*எண் 1, சோபியா சாலை*
*#03-39, பீஸ் சென்டர்,*
*சிங்கப்பூர் 228149*
*தொலைப்பேசி : 3366316*
*தொலைப்பிரதி : 3335616*

# MEMORABLE VISIT OF INDIAN PRESIDENT TO SINGAPORE

Indian President, His Excellency, K. R. Narayanan and his wife, Usha Narayanan made an official visit to Singapore on the second week of November 2000 at the invitation of our President S. R. Nathan and First Lady. While in Singapore, the distinguished guests met with various representatives of local Indian organisations.



*A touching moment — Indian President, His Excellency K. R. Narayanan and TRC President, Dr. R. Theyvendran, PBM during the cordial and friendly discussions.*

The Indian community here in conjunction with the Indian High Commission in Singapore held a grand reception at the Shangri-La Hotel on Sunday 12th November, 2000 in honour of the visiting dignitaries.

Representatives of TRC's affiliate organisations took an active part in the function and subsequent discussions.



*Tamil Reforms Association's Secretary, Mr. A. V. Krishnasamy and Vice-President of TRC's Women's League, Mrs. Indira Krishnasamy with the President.*



*Mr. Davinder Singh, MP for Toa Payoh GRC (centre) with TRC's Management Committee at the same function.*

## Warm Welcome And Cordial Discussions With INDIAN MINISTER

The Indian High Commission of Singapore organised a warm Get-Together for the Indian Minister of State for Foreign Affairs, Mr. Krishnam Raju with Singapore Indian Organisations on 3rd November at the Singapore Indian Association premises.



